டிஜிட்டல் டெய்லி
Kalaimani.com
காலைமணி.காம்
12.9.2023 செவ்வாய்க்கிழமை • மதுரை • பக்கங்கள் 25 • Online Edition • www.kaalaimani.com

### உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியின் மூலம்

# உயிரி எரிபொருள் துறையில் இந்தியா உலகிற்கு புதிய பாதையைக் காட்டும்

## மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி நம்பிக்கை

புது தில்லி, செப்.11

உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி மூலம் உயிரி எரிபொருட்களில் இந்தியா உலகிற்கு ஒரு புதிய பாதையைக் காட்டும் என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் தொடர்ச்சியான பதிவுகள் மூலம் தனது கருத்துக்களை வெளிப்படுத்திய அமைச்சர், வசுதைவ குடும் பகம் என்ற மந்திரத்தைப் பின்பற்றி, பிரதமர் நரேந்திர மோடியின் இந்த முயற்சி நிச்சயமாக உலகம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசலைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய எரிசக்தித் துறையில் வரலாறு படைத்த பிரதமர் நரேந்திர மோடி, ஜி20 உச்சிமாநாட்டின் போது உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியை (ஜி.பி.ஏ) நேற்று தொடங்கி வைத்தார். இந்தக் கூட்டணியில் சேர 19 நாடுகளும், 12 சர்வதேச அமைப்புகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

ஜி.பி.ஏ என்பது உயிரி எரிபொருட்களை ஏற்றுக்கொள்வதற்கு வசதியாக அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையின் கூட்டணியை உருவாக்குவதற்கான இந்தியா தலைமையிலான முயற்சியாகும். நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களை ஒன்றிணைத்து, உயிரி எரிபொருள் மேம்பாடு மற்றும் நிலைநிறுத்தலை ஊக்குவிக்கும் இந்த முன்முயற்சி, உயிரி எரிபொருட்களை, எரிசக்தி மாற்றத்திற்கான முக்கிய காரணியாக நிலைநிறுத்துவதையும், வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஜி20 உச்சிமாநாட்டின்போது ஜி.பி.ஏ தொடங்கப்பட்டதன் மூலம், தூய்மையான மற்றும் பசுமையான எரிசக்திக்கான உலகின் தேடல், வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று ஹர்தீப் சிங் பூரி குறிப்பிட்டார். உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியை உரு வாக்குவதற்கான விதைகளை விதைத்ததற்காக அமெரிக்காவின் எரிசக்தித் துறை செயலாளர் ஜெனிபர் கிரான்ஹோம், பிரேசில் எரிசக்தித்துறை அமைச்சர் அலெக்சாண்டர் சில்வேரா, யுனிகா பிரேசிலின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எவாண்ட்ரோ குஸ்ஸி ஆகியோருக்கு இந்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

ஜி20 நாடுகள் மற்றும் சர்வதேச எரிசக்தி முகமை (ஐ.இ.ஏ), சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ஐ.சி.ஏ.ஓ), உலகப் பொருளாதார அமைப்பு (டபிள்யூ.இ.ஓ) உலக எல்.பி.ஜி சங்கம் போன்ற எரிசக்தி தொடர்பான உலகளாவிய அமைப்புகளின் ஆதரவுடன், தொலைநோக்குப் பார்வை கொண்ட உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி, சர்வதேச உயிரி எரிபொருள் வர்த்தகம் மற்றும் சிறந்த நடைமுறைகளை வலுப்படுத்தும் என்று திரு ஹர்தீப் சிங் பூரி கூறினார். கடந்த 9 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.71,600 கோடி வழங்கியுள்ளோம். 2025 ஆம் ஆண்டிற்குள் இ20 அமலாக்கத்தின் மூலம், இந்தியா எண்ணெய் இறக்குமதியில் சுமார் 45,000 கோடி ரூபாயையும், ஆண்டுக்கு 63 மெட்ரிக் டன் எண்ணெயையும் மிச்சப்படுத்தும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த முயற்சி இந்தியாவுக்கும் பல முனைகளில் பயனளிக்கும். ஜி20 தலைமைத்துவத்தின் உறுதியான விளைவாக, ஜி.பி.ஏ, உலக அளவில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்த உதவும். இது இந்தியாவின் தற்போதைய உயிரி எரிபொருள் திட்டங்களான பிரதமரின் ஜீவன் யோஜனா, சதத் மற்றும் கோபர்தன் திட்டங்களை விரைவுபடுத்த உதவும். இதன் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இந்திய சூழல் அமைப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களிக்கும். உலகளாவிய எத்தனால் சந்தையின் மதிப்பு 2022ம் ஆண்டில் 99.06 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. மேலும் 2032ம் ஆண்டில் 5.1% சி.ஏ.ஜி.ஆர் ஆகவும், 2032ம் ஆண்டில் 162.12 பில்லியன் அமெரிக்க டாலராகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. நிகர பூஜ்ஜிய இலக்குகள் காரணமாக, 2050ம் ஆண்டில் 3.5-5 மடங்கு உயிரி எரிபொருள் வளர்ச்சி திறன் இருக்கும், இது இந்தியாவுக்கு ஒரு பெரிய வாய்ப்பை உருவாக்கும் என்று ஐ.இ.ஏ தெரிவித்துள்ளது.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# செமிகண்டக்டர் துறையில் தடையற்ற வினியோகம் மேற்கொள்ள இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து ஆதரவளிக்க முடிவு

புது தில்லி, செப்.11

செமிகண்டக்டர் துறையில் தடையற்ற வினியோகத் தொடரை மேற்கொள்ள இந்தியாவும், அமெரிக்காவும் ஆதரவுஅளிப்பதாக இருநாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப் பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இது குறித்து விரிவான செய்தியாவது: ஜி–20 மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன், இந்திய பிரதமர் மோடி இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இதன் பின் வெளியிடப் பட்ட கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: செமிகண்டக்டர் துறையில் தடையற்ற வினியோகத் தொடரை மேற்கொள்ள இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து ஆதரவளிக்க முடிவு செய்துள்ளன. இந்தியாவின் செமிகண்டக்டர் உற்பத்தித் துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக 5,810 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தில் அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வது குறித்து தங்களின் மகிழ்ச்சியை இருநாட்டு தலைவர்களும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்தியாவில், முதலீட்டு செலவுகளைக் குறைக்கவும், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி, பேட்டரி சேமிப்பு மற்றும் வளர்ந்து வரும் பசுமை தொழில்நுட்பத் திட்டங்களின் பயன்பாடுகளை விரைவுபடுத்தவும், முதலீட்டுத் தளங்களை உருவாக்க இருநாடுகளும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த இலக்கை நோக்கி இந்தியாவின் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியம் மற்றும் அமெரிக்க மேம்பாட்டு நிதி கார்ப் பரேசன் ஆகிய இரண்டும் இணைந்து புதுப்பிக்கத்தக்க உள்கட்ட மைப்பு நிதியை உருவாக்க தலா 4,150 கோடி ரூபாய் நிதியை வழங்குவதற்கான விருப்பக் கடிதங்களை பரிமாறிக்கொண்டன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# தமிழகத்தில் உச்ச மின் தேவை 9.72 சதம் அதிகரிப்பு

சென்னை, செப்.11

வறண்ட வானிலை நிலவியதால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 9.72 சதம் மின்நுகர்வு அதிகரித்து உள்ளதாக தென் மண்டல மின் பரிமாற்ற மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது:

தென் மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் அதிக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் 20ம் தேதியன்று எப்போதும் இல்லாத உச்சகட்டமாக தமிழகத்தில் 19,387 மெகாவாட் மின் தேவை இருந்தது. அதே நாளில், 423.78 மில்லியன் யூனிட் மின்நுகர்வு பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், தெற்கு மண்டலங்களில் மின் கட்டமைப்புகளின் தேவை அதிகரித்து வருவதாகவும். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 51.68 ஜிகா வாட்டாக இருந்த அதிகபட்ச தேவை இந்த ஆண்டு 63.84 ஜிகா வாட்டாக இருந்தது. ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் இருந்து தொடர்ந்து 60 ஜிகா வாட்டை தாண்டி மின் தேவை இருந்தது. மேலும் வறண்ட வானிலை காரணமாக மின்தேவை அதிகரித்துள்ளதாக தென் மண்டல மின் பரிமாற்ற மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து தென் மண்டல மின் பரிமாற்ற மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை 16,411 மெகாவாட்டாக இருந்தது இந்தாண்டு 9.72 சதவீதம் அதிகரித்து 18,007 மெகாவாட்டாக இருந்ததாக மத்திய மின்சார ஆணையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தமிழ்நாடு மொத்தமாக 9,885 மெகாவாட் அதிகமாக பெற்றுள்ளது.

இது தொடர்பாக மின் பரிமாற்ற மையம் எச்சரிக்கை செய்தும், அவசர செய்திகள் வழங்கியும், சீரான இடைவெளியியில் அதிகளவில் மின் நுகர்வு காணப்பட்டது. இது போல அதிகளவில் நுகர்வது கட்டமைப்பின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும். மாநில மின் உற்பத்தி நிலையங்கள், மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பிராந்திய மின் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட அளவில் குறைவாக உற்பத்தியே மின்சார குறைபாட்டிற்கு காரணமாக அமைந்தது. அக்டோபர் முதல் வாரம் வரை தென் மண்டலங்களில் தேவை அதிகமாக இருக்கும். உற்பத்தி பிரச்சினையை தீர்க்க ஒரு செயல் திட்டத்தை வகுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தென் மண்டல அதிகாரக் குழுவினர் வரவிருக்கும் கூட்டத்தில் இந்த பிரச்னைகள் குறித்து விவாதம் நடத்தவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# 6,409 மெ.டன் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி திருச்சி சர்வதேச விமான நிலையம் அசத்தல்

திருச்சி, செப்.11

6,409 மெ.டன் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி திருச்சி சர்வதேச விமான நிலையம் அசத்தியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஆண்டுக்கு 6,409 மெ.டன் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு ஏற்றுமதி, இறக்குமதி எவ்வளவு அதிகமாக இருந்தாலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரிய அளவில் இருக்காது. உள் நாட்டில் உற்பத்தியாகும் அனைத்து பொருட்களும் வெளநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அந்நிய செலாவணி அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் உயரும். ஆனால் வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திற்கு கப்பல் மற்றும் விமானம் மூலம்தான் அதிகமாக நடைபெற்று வருகிறது. இதில் முக்கியத்துவம் பெறுவது விமான சரக்கு போக்குவரத்துதான். கொரோனா காலகட்டத்தில் உலகம் முழுவதும் ஏற்றுமதி மிகவும் பாதிப்புக்குள்ளானது.

கொரோனா தாக்கத்திற்கு பிறகு விமானம் மூலம் கையாளும் சரக்கு ஏற்றுமதி சீராகியுள்ளது. ஆனாலும் திருச்சிக்கு என்று சரக்குகளை மட்டும் கொண்டு செல்லும் தனி விமானங்கள் இயக்கப்படுவதில்லை. தற்போது வரை பயணிகள் விமானத்தில் மட்டுமே சரக்குகளை கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர், துபாய், அபுதாபி, சார்ஜா, குவைத், மஸ்கட், தோஹா, கொழும்பு, கோலாலம் பூர் போன்ற நாடுகளுக்கு தினம் மற்றும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, வாரம் ஒருமுறை என்ற விகிதத்தில் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது திருச்சியில் இயக்கப்படும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், இன்டிகோ, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், மலிண்டோ, ஏர் ஏசியா, ஸ்கூட் போன்ற பயணிகள் விமானங்கள் மூலம் பொருட்கள் கொண்டு செல்லப்படுகிறது. தினமும் 18 மெட்ரிக் டன் பொருட்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மாதத்திற்கு 550 மெட்ரிக் டன்னும், ஆண்டுக்கு 6,409 மெட்ரிக் டன் சரக்குகளும் கையாளப்படுகிறது. இதில் 98 சதம் காய்கறிகள், பழங்கள், பூக்கள், கீரை வகைகள், பால் பொருட்கள், மீன்கள் கொண்டு செல்லப்படுகிறது. மீதி 2 சதம் துணி வகைகள், வீட்டு உபயோக பொருட்கள், பரிசு பொருட்கள் மற்றும் புத்தகங்கள் கொண்டு செல்லப்படுகிறது. திருச்சி விமான நிலையத்திற்கு கொண்டு வரும் பொருட்கள் 48 மணி நேரத்திற்குள் குறிப்பிட்ட நாட்டிற்கு அனுப்பி வைக்க அனைத்து விதமான நடவடிக் கைகளும் திருச்சி விமான நிலைய அதிகாரிகளால் எடுக்கப்பட்டு வருகிறது.

# பரோடா வங்கியின் 6,000 ஏடிஎம்-களில் யுபிஐ வசதி அறிமுகம்

மும்பை, செப்.11

வங்கி அட்டை இல்லாமலேயே யுபிஐ செயலியைப் பயன்படுத்தி பணம் எடுக்கும் வசதியை பொதுத் துறையை வங்கியான பேங்க் ஆஃப் பரோடா தனது 6,000 ஏடிஎம் மையங்களுக்கு விரிவாக்கி யுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. இது குறித்து பரோடா வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது: பீம் யுபிஐ, பிஓபி வேர்ல்டு யுபிஐ மற்றும் பிற யுபிஐ செயலி களைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள், வங்கியின் ஏடிஎம் மையங்களில் கடன் அட்டை இல்லாமலேயே பணம் எடுக்கும் வசதி கடந்த ஜூன் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வசதி, வங்கியின் 6,000 ஏடிஎம் மையங்களுக்கு தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.ஏடிஎம் இயந்திரங்களில் யுபிஐ மூலம் பணம் எடுப்பு' என்ற பகுதியை தேர்வு செய்து, பின்னர் தேவையான தொகையை உள்ளீடு செய்தால் திரையில் க்யூஆர் குறியீடு தோன்றும். அதனைப் பயன்படுத்தி யுபிஐ செயலிகள் மூலம் பணம் எடுக்கலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழகத்திற்கு 8,500 டன் கோதுமை ஒதுக்கீடு மத்திய அரசு ஒப்புதல்

சென்னை, செப்.11

தமிழக ரேன் கடைகளில் முன்னுரிமை, அந்தியோதயா கார்டுதாரர்களுக்கு மாதந்தோறும், 8,500 டன் கோதுமை ஒதுக்கீடு செய்வதற்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழக ரேஷன் கடைகளில், 96 லட்சம் முன்னுரிமை, 18.64 லட்சம் அந்தியோதயா கார்டுதாரர்களுக்கு, கோதுமை இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்காக, மத்திய அரசு மாதம், 8,500 டன் கோதுமை ஒதுக்கீடு செய்கிறது. அதற்கு ஏற்ப, ஒவ்வொரு கார்டுதாரருக்கும் தலா, 3 கிலோ வரை கோதுமை வழங்கப்படுகிறது.

மத்திய அரசு, கடந்த மாதம் தமிழகத்திற்கான கோதுமை ஒதுக்கீட்டை, 1,038 டன்னாக குறைத்தது. இதனால், அனைத்து கார்டுதாரர்களுக்கும் கோதுமை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால், தமிழகத்திற்கு வழக்கம் போல கோதுமை வழங்க வேண்டும் என, தமிழக உணவுத் துறை சார்பில், மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. இதுகுறித்து, தமிழக அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகளிடம் நேரிலும் பேசினர். இந்நிலையில், உணவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது:

முன்னுரிமை கார்டுதாரர்கள் எண்ணிக்கை தவறாக கணக்கிடப் பட்டு, அதற்கு ஏற்ப கோதுமை ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. இது, மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தவறு சுட்டிக் காட்டப்பட்டது. இதையடுத்து, தற்போது தமிழகத்திற்கு ஏற்கனவே வழங்கியது போல மாதம், 8,500 டன் கோதுமையை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# திருச்சிக்கு மெட்ரோ ரயில், சேலத்துக்கு மெட்ரோ நியோ தமிழக அரசுக்கு மெட்ரோ ரயில் நிறுவனம் பரிந்துரை

சென்னை, செப்.11

திருச்சியில் மெட்ரோ ரயில் திட்டம், சேலத்தில் மெட்ரோ நியோ போக்குவரத்து திட்டம் மற்றும் நெல்லையில் அதிக திறன்கொண்ட பேருந்து போக்குவரத்தை செயல்படுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு மெட்ரோ நிறுவனம் பரிந்துரை செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. சென்னையில் இரு வழித் தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதற்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால், கோவை, திருச்சி யில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக கோரிக்கைகள் எழுந்தன.

அங்கு பெருந்திரள் மற்றும் துரிதப் போக்குவரத்து (எம்ஆர்டிஎஸ்) திட்டம் தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டது. இந்நிலையில், திருச்சி, திருநெல்வேலி, சேலம்ஆகிய மாநகரங்களில் சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும் பணியில் மெட்ரோ ரயில் நிறுவனம் ஈடுபட்டது. இந்நிலையில் சாத்தியக் கூறு அறிக்கை, தமிழக அரசின் சிறப்பு முயற்சிகள் துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது: திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிகளில் மக்களின் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் பெருந்திரள் மற்றும் துரிதப் போக்குவரத்துக்கான சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இதில், மூன்று நகரங்களுக்கும் உகந்த வழித் தடங்கள் கண்டறியப்பட்டன. அதன்படி, போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்ற மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சியில் இரு வழித்தடங்களில் 45 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்காக 45 நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. திருநெல்வேலியில் 3 வழித்தடங்களில் 39.07 கி.மீ. தொலைவுக்கு அதிக திறன் கொண்ட பேருந்து அடிப்படையிலான போக்குவரத்து அமைப்பு (பிஆர்டிஎஸ்) ஏற்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சேலத்தில் இரு வழித் தடங்களில் 35.19 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ நியோ திட்டம் செயல்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மெட்ரோ நியோ என்பது உயர் நிலை மின்சார இழுவை மற்றும் ரப்பர் டயர்கள் கொண்ட பேருந்து அமைப்பாகும். மெட்ரோ நியோ பெட்டிகள் வழக்கமான மெட்ரோ ரயிலை விட சிறியதாகவும், இலகுவாகவும் இருக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கடந்த ஆகஸ்டில் கார்களின் விற்பனை உயர்வு

புது தில்லி, செப்.11

பண்டிகைக் காலத்தில் தேவை உயர்ந்தது, ஸ்போர்ட் யுட்டிலிட்டி வாகனங்களுக்கு (எஸ்யுவி) வரவேற்பு அதிகரித்தது போன்ற காரணங்களால் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கார்களின் விற்பனை புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

இது குறித்து சந்தை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:



கடந்த ஆகஸ்ட் மாதம் வாகனத் துறைக்கு மிகவும் சிறப்பான மாதமாக இருந்தது. அந்த மாதத்தில் 3,60,897 கார்கள் விற்ப னையாகின. இது, இந்தியச் சந்தையில் இதுவரை இல் லாத அதிகபட்ச மாதாந்திர விற்பனையாகும்.இதற்கு முன்னர் கடந்த 2022 செப்டம்பர் மாதத்தில் 3,55,400 கார்கள் விற்பனையானதே அதிகபட்ச மாதாந்திர விற் பனையாக இருந்தது.கடந்த 2022 ஆகஸ்ட் மாதத்தில் 3,26,980 கார்கள் விற்பனையாகியிருந்தன. அதனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆகஸ்டில் கார்களின் விற்பனை 9.7 சதம் அதிகரித்துள்ளது.

ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் கார்களின் விற்பனை 17 லட்சத்தை தாண்டியுள்ளது. இது முந்தைய நிதியாண் டின் இதே காலகட்டத்தை விட 8 சதம் அதிகமாகும்.எஸ்யுவி வகை வாகனங்களுக்கு வாடிக்கையாளர்களிடையே கிடைத்த மிக அமோகமான வரவேற்பு கடந்த ஆகஸ்டில் ஒட்டுமொத்த கார்களின் விற்பனையை உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. அந்த மாத ஒட்டுமொத்த கார்களின் விற்பனையில் எஸ்யுவி வகை வாகனங்கள் 48.6 சதம் பங்கு வகிக்கின்றன.

கடந்த 2022-23ம் நிதியாண்டில் உள்நாட்டு கார் சந்தையில் எஸ்யுவி வகை கார்களின் பங்களிப்பு 43 சதமாக இருந்தது.தனது எஸ்யுவி வகை வாகனங்களின் வலுவான விற்பனையின் காரணமாக நாட்டின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான மாருதி சுஸுகி கடந்த ஆகஸ்டில் அதிகபட்ச விற்பனையைப் பதிவு செய்துள்ளது. மேலும், அந்த மாதத்தில் நிறுவனத்தின் 1,89,082 கார்கள் விற்பனையாகியுள்ளன. கிராண்ட் விட்டாரா, ப்ரெஸ்ஸா மற்றும் ஜிம்னி போன்ற கார் ரகங்களின் அமோக விற்பனை இதற்குக் கைகொடுத்தது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன் விரைவில் அறிமுகம் செய்யத் திட்டம்

சென்னை, செப்.11

ரெட்மி நிறுவனம் விரைவில் ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட் போனை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் ரெட்மி நோட் 13 ப்ரோ ஆனது சீனாவில் 3சி சான்றிதழைப் பெற்றுள்ளது. வரும் அக்டோபர் மாதம் இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்யப்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. இதன் சிறப்பம்சங்கள் குறித்து வெளிவந்துள்ளதாவது:

இந்த ஸ்மார்ட்போன் ஆனது மீடியாடெக் டைமன்சிட்டி 7200 சிப்செட் வசதியைக் கொண்டுள்ளது. 200எம்பி சாம்சங் எச்பி3 பிரைமரி கேமரா+ 8எம்பி சோனி ஐஎம்எஸ்355 சென்சார் அல்ட்ரா வைடு லென்ஸ் + 2எம்பி மேக்ரோ கேமரா என்கிற ட்ரிபள் ரியர் கேமராவுடன் இந்த ரெட்மி ஸ்மார்ட்போன் அறிமுகமாகும். இதுதவிர எல்இடி பிளாஷ் மற்றும் பல்வேறு கேமரா அம்சங்களை கொண்டுள்ளது இந்த போன்.

செல்பிகளுக்கும், வீடியோகால் அழைப்புகளுக்கும் என்றே 16எம்பி கேமராவைக் கொண்டுள்ளது. குறிப்பாக டிஎஸ்எல்ஆர் கேம ராக்களை விட இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ போனின் உதவியுடன் அட்டகாசமான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுக்க முடியும். 6.67-இன்ச் ஒஎல்இடி டிஸ்பிளே கொண்டு இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன் வெளிவரும். அதேபோல் 120 ஹெர்ட்ஸ் ரெஃப்ரெஷ் ரேட்,1000 நிட்ஸ் ப்ரைட்னஸ், 240 ஹெர்ட்ஸ் டச் சாம்ப்ளிங் ரேட் மற்றும் சிறந்த பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

குறிப்பாக ரெட்மி நோட் 13 ப்ரோ போனில் 8ஜிபி/16ஜிபி ரேம் மற்றும் 256ஜிபி/512ஜிபி ஸ்டோரேஜ் ஆதரவு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக மெமரி நீட்டிப்பு ஆதரவு இதில் உள்ளது. அதாவது நீங்கள் மெமரி கார்டை பயன்படுத்த ஒரு மைக்ரோ எஸ்டி கார்டு ஸ்லாட் ஆதரவைக் கொண்டுள்ளது. 5000 எம்ஏஎச் பேட்டரி வசதியைக் கொண்டுள்ளது இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன். மேலும் இந்த பேட்டரியை சார்ஜ் செய்ய 67வாட்ஸ் ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி உள்ளது. 5ஜி, 4ஜி வோல்ட்இ, வைஃபை, ஜிபிஎஸ், 3.5எம்எம் ஆடியோ ஜாக், யுஎஸ்பி டைப்-சி போர்ட் உள்ளிட்ட பல கனெக்டிவிட்டி ஆதரவுகளுடன் இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன் வெளிவரும். அதேபோல் இந்த ரெட்மி நோட் 13 ப்ரோ ஸ்மார்ட்போன் இந்தியாவில் ரூ.20,000 பட்ஜெட்டில் அறிமுகமாகும் என்று தகவல் வெளிவந்துள்ளது.

# தனியார் முதலீடுகளை அதிகரிக்க புதிய நடைமுறை அறிமுகம் செய்ய வேண்டும்

## பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளுக்கு ஜி20 கூட்டமைப்பு வலியுறுத்தல்

புது தில்லி, செப்.11

தனியார் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளுக்கு ஜி20 கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. இது தொடர்பாக ஜி20 புது தில்லி மாநாட்டு கூட்டு பிரகடனத்தில், பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளின் மூலதன கையிருப்பு விதிகளை ஆய்வு செய்வதற்காக ஜி20 கூட்டமைப்பு சார்பில் தனி ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளின் தனிப்பட்ட நிர்வாக விதிகளுக்கு உள்பட்டு அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு வலியுறுத்தப்படுகிறது. அவற்றின் அமலாக்கத்தைக் கண்காணிப்பதற்கான நடைமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. வளர்ச்சி சார்ந்த திட்டங்களை அமல்படுத்துவதற்கு முதலீடுகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அதைக் கருத்தில்கொண்டு, தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பன்னாட்டு வளர்ச்சி வங்கிகள் மேற்கொள்ள வேண்டும். அதுசார்ந்த புதுமையான திட்டங்களையும் அமல்படுத்துமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.51.92 லட்சம் கோடி: மத்திய அரசு தகவல்

புது தில்லி, செப்.11

நாட்டின் வெளிநாட்டுக் கடன் 624.7 பில்லியன் டாலராக (சுமார் ரூ.51.92 லட்சம் கோடி) உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. சமீபத்தில் மத்திய நிதியமைச்சகம் சார்பில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நிலவர அறிக்கை 2022-23 வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையின் முன்னுரையில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளதாவது: கடந்த மார்ச் மாத இறுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 624.7 பில்லியன் டாலராக இருந்தது. அத்துடன் கடனை திருப்பி அளிக்க வேண்டிய பணத் தேவையின் விகிதமும் 5.3 சதமாக சௌகரியான நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் இறுதியில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் 20 சதமாக இருந்தது. இது இந்த ஆண்டு மார்ச் இறுதியில், 18.9 சதமாக சரிந்தது. மொத்த வெளி நாட்டுக் கடனில் நீண்ட கால கடனின் பங்கு 79.4 சதவீதமாகவும், குறுகிய கால கடனின் பங்கு 20.6 சதவீதமாகவும் உள்ளது.

பெரும்பாலான குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நிலை சிறப்பாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு மார்ச் இறுதியுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு மார்ச் இறுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 5.6 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.46,550 கோடி) அதிகமாக உள்ளது என்று இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 59,889 கோடி டாலராக அதிகரிப்பு: ஆர்பிஐ



மும்பை, செப்.11

கடந்த 1ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 59,889 கோடி டாலராக அதிகரித்துள்ள தாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து ஆர்பிஐயின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது: கடந்த செப்.1ம் தேதியுடன் நிறைவ டைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 403.9 கோடி டாலர்கள் அதிகரித்து 59,889.7 கோடி டாலராக உள்ளது. கடந்த மாதம் 25ம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 3 கோடி டாலர்கள் சரிந்து 59,485.8 கோடி டாலராக இருந்தது.

அக்டோபர் 2021ல் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 64,500 கோடி டாலரை எட்டியது. உலகளாவிய பொருளாதாரச் சூழல்களால் ஏற்படும் அழுத்தங்களுக்கு இடையே ரூபாய் மதிப்பைப் பாதுகாப்பதற்காக அந்நியச் செலாவணி கையிருப்பை ரிசர்வ் வங்கி பயன்படுத்துவதால் அது குறைந்து வந்தது. கடந்த 1ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 344.2 கோடி டாலர் அதிகரித்து 53,069.1 கோடி டாலராக உள்ளது.

டாலர் அல்லாத யூரோ, பவுண்ட், யென் போன்ற பிற செலா வணிகளின் கையிருப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகள் ஆகும். மதிப்பீட்டு வாரத்தில் நாட்டின் தங்கம் கையிருப்பு 58.4 கோடி டாலர் அதிகரித்து 4,493.9 கோடி டாலராக உள்ளது. சிறப்பு வரைதல் உரிமைகள் 10 லட்சம் டாலர் உயர்ந்து 1,819.5 கோடி டாலராக உள்ளது. சர்வதேச நிதியத்தில் நாட்டின் கையிருப்பு 1.2 கோடி டாலர் அதிகரித்து 50.73 கோடி டாலராக உள்ளது என்று ஆர்பிஐயின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

### 1.66 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 0.17 லட்சம் மெட்ரிக் டன் அரிசி

# மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன

புது தில்லி, செப்.11

அரிசி, கோதுமை மற்றும் ஆட்டா ஆகியவற்றின் சில்லறை விலையைக் கட்டுப்படுத்துவதற்கான சந்தை இடையீட்டிற்கான மத்திய அரசின் முன்முயற்சியின் ஒரு பகுதியாக,கோதுமை மற்றும் அரிசியின் வாராந்திர மின்னணு ஏலங்கள் நடத்தப்படுகின்றன. 2023-24 ஆம் ஆண்டிற்கான 11-வது மின் ஏலம் 06.09.2023 அன்று நடைபெற்றது. நாடு முழுவதும் உள்ள 500 கிடங்குகளில் இருந்து 2.0 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 337 கிடங்குகளில் இருந்து 4.89 லட்சம் மெட்ரிக் டன் அரிசியும் வழங்கப்பட்டன.



மின்னணு ஏலத்தில், 1.66 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையும், 0.17 லட்சம் மெட்ரிக் டன் அரிசியும் விற்பனை செய்யப்பட்டன. இருப்பு விலையான ரூ.2150வுக்கு எதிராக, எப்.ஏ.க்யு கோதுமை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2169.65 ஆகவும், யூ.ஆர்.எஸ் கோதுமையின் எடையிடப்பட்ட சராசரி விற்பனை விலைகுவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2150.86 ஆகவும் (இருப்பு விலை ரூ. 2125) இருந்தது.

இந்தியா முழுவதும் அரிசியின் சராசரி விற்பனை விலை ரூ.2956.19 ஆகவும், இருப்பு விலை ரூ.2952.27 ஆகவும் இருந்தது. தற்போதைய மின்னணு ஏலத்தில், கோதுமை அதிகபட்சம் 100 டன் வரையிலும், அரிசி 1000 டன் வரையிலும் வழங்கப்படுவதன் மூலம் சில்லறை விலை குறைப்பு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள பயனர்களை ஊக்குவிப்பதற்கும், அதிக பங்கேற்பாளர்கள் முன்வந்து அவர்கள் விரும்பும் கிடங்கிலிருந்து அளவை ஏலம் எடுப்பதை உறுதி செய்வதற்கும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கையிருப்பு பதுக்கலைத் தவிர்ப்பதற்காக, ஓ.எம்.எஸ்.எஸ் (டி) இன் கீழ் வணிகர்கள் கோதுமை விற்பனை வரம்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். ஓ.எம்.எஸ்.எஸ் (டி) இன் கீழ் கோதுமையை வாங்கிய உற்பத்தியாளர்களின் அரவை ஆலைகளில் வழக்கமான சோதனைகள் / ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 05.09.23 வரை நாடு முழுவதும் 898 சோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

# ஜூலை மாதத்தில் சேவைகள் துறையில் மிதமான சரிவு
# எஸ் &பி குளோபல் இன்டெலிஜென்ஸ் ஆய்வறிக்கை

புது தில்லி, செப்.11

கடந்த ஜூலை மாதத்தில் 13 ஆண்டுகள் காணாத வளர்ச்சியைப் பதிவு செய்த இந்தியாவின் சேவைகள் துறை, ஆகஸ்ட் மாதத்தில் மிதமாக சரிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.இது குறித்து சந்தை ஆய்வு நிறுவனமான எஸ் அண்ட் பி குளோபல் மார்க்கெட் இன்டெலிஜென்ஸ் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சேவைகள் துறையில் தொழில் நடவடிக்கைகளுக்கான குறியீட்டு எண்ணான பிஎம்ஐ, கடந்த கடந்த ஜனவரி மாதத்தில் 57.2-ஆக இருந்தது. பிப்ரவரி மாதத்தில் அது 59.4-ஆக அதிகரித்தது. அது, கடந்த 12 ஆண்டுகள் காணாத அதிகபட்ச எண்ணாகும். எனினும், மார்ச் மாதத்தில் அது மீண்டும் 57.8-ஆக குறைந்தது. பின்னர் அது ஏப்ரலில் கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்சமாக 62.0-ஆக அதிகரித்தது.

மே மாதத்தில் 61.2-ஆகவும், ஜூன் மாதத்தில் 58.5-ஆகவும் இருந்த பிஎம்ஐ, கடந்த ஜூலை மாதத்தில் 62.3-ஆக அதிகரித்தது. இதுவும் கடந்த 13 ஆண்டுகளில் காணப்படாத அதிகபட்ச பிஎம்ஐ எண்ணாகும்.

இந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சேவைகள் துறைக்கான பிஎம்ஐ 60.1-ஆக சரிந்துள்ளது. மதிப்பீட்டு மாதத்தில் பிஎம்ஐ சரிந்தாலும், அந்த மாதத்தில் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளின் வளர்ச்சியும், சேவைகளுக்கான தேவையும் அதிகரித்தது. இது, சேவைகள் துறையின் மிதமான மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. இதன்மூலம், தொடர்ந்து 25வது மாதமாக பிஎம்ஐ குறியீட்டு எண் நடுநிலை வரம்பான 50-க்கும் மேலே உள்ளது. அந்தக் குறியீட்டு எண் 50-க்கும் மேல் இருப்பது சேவைகள் துறையின் ஆரோக்கியமான போக்கையும், 50க்கும் குறைவாக இருப்பது பின்னடைவையும் குறிக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.16.64 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் பணி ஆணைகள்: பயனாளிகளுக்க ஆட்சியர் வழங்கினார்

நாமக்கல், செப்.11

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ச.உமா மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று, சுமார் ரூ.16.64 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் பணி ஆணைகளை வழங்கினார்.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடுஇ குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 446 மனுக்களை மாவட்ட ஆட்சியர் ச.உமாவிடம் பொதுமக்கள் வழங் கினார். மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் ச.உமா தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பித்த மாணவியர்கள் வி.கே.தேவயானி மற்றும் செல்வி.வி.கே. தேவயாழினி ஆகிய இரட்டையர்களுக்கு தலா ரூ. 15,000 வீதம் ரூ.30000க்கான காசோலை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு அதிநவீன செயற்கை அபயம் சுமார் ரூ.4.54 லட்சம் மதிப்பீட்டிலும், முன்னாள் படை நலன் சார்பில் ஈமச்சடங்கு நிதியுதவியின் கீழ் மூன்று நபர்களுக்கு தலா ரூ.10,000 விதம் மொத்தம் ரூ.30,000-க்கன ஆணை, மேலும், ரூ 5.00 லட்சம் / ரூ 3.00 லட்சத்திற்கு மேல் கோடி நாள் வசூல் செய்த 22 அலுவலர்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாடு அழகு சார்பில் நடைபெற்ற மாரத்தான் நிகழ்வில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியர்கள், 1 மூன்றாம் பாலினத்தவர், 7 தன்னார்வலர்கள் ஆகியோருக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் ச.உமாவிடம் நல்லாசிரியர் விருது பெற்ற 9 ஆசிரியர்கள் வாழ்த்து பெற்றனர் மற்றும் முத்தகாபட்டி துணை சுகாதார நிலையம் கட்டடம் கட்டுவதற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தனது பங்களிப்பாக ரூ.11.00 லட்சம் காசோலையினை மருத்துவர் நர்மதா வழங்கினார்.

# ஆதித்யா விண்கலம் புவி சுற்று வட்டப்பாதையின் உயரம் 3வது முறையாக அதிகரிப்பு: இஸ்ரோ அறிவிப்பு



பெங்களூரு, செப்.11

ஆதித்யா எல்1 விண்கலத்தின் புவி சுற்றுவட்ட பாதையின் உயரம், மூன்றாவது முறையாக உயர்த்தப்பட் டுள்ளது. இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட செய்தி அறிக்கையாவது: ஆதித்யா எல்1 விண்கலத்தின் புவி சுற்று வட்டப்பாதையின் உயரம், நேற்று மூன்றாவது முறையாக உயர்த்தப்பட்டது. பூமியில் இருந்து, 296 கி.மீ.,க்கு 71,767 கி.மீ., என்ற தொலைவுக்கு விண்கலம் சுற்றி வரும் உயரம் உயர்த்தப்பட் டுள்ளது. கர்நாடகாவின் பெங்களூரு, அந்தமான் தீவுகளின் போர்ட் பிளேயர், மொரீஷியஸ் ஆகிய இடங்களில் உள்ள இஸ்ரோ கட்டுப்பாட்டு அறைகளில் இருந்து விண்கலத்தின் நகர்வு கள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கடன் சுமை இல்லாமல் இருப்போர் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட குறைந்துள்ளது: ஆய்வு

புது தில்லி, செப்.11

அதிகரிக்கும் செலவுகள் மற்றும் போதிய சேமிப்பு இல்லாதது, தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள தடையாக இருப்பதாக, பெரும்பாலான இந்தியர்கள் கருத்து தெரிவித்திருப்பதாக ஆய்வு தகவல்கள் வெளியாகியுள்ளது.

இணைய நிதிச்சேவை நிறுவனம் பாங்க்பஸார் நிறுவனம், சுகாதாரம், செல்வம், புகழ், தனிப்பட்ட வளர்ச்சி, உறவுகள் ஆகிய பிரிவுகளில் அடிப்படையில் 10க்கும் மேற்பட்ட இலக்குகளின் கீழ் இந்தியர்கள் மத்தியில் கருத்துக்கணிப்பு நடத்தி விருப்ப குறியீட்டை வெளியிட்டு வருகிறது.

இவ்வாண்டு, இந்தியா முழுவதும் ஆறு மெட்ரோ நகரங்கள் மற்றும் 18 இரண்டாம் அடுக்கு நகரங்களில் ஊதியம் பெறுபவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், இந்த குறியீடு கடந்த ஆண்டை விட குறைந்திருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும், விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும் தன்மை அடிப்படையில் இந்த குறியீடு அமைகிறது. வாழ்வியல் செலவு அதிகரிப்பு, சேமிப்பு குறைவு, கடனுக்கான வட்டி விகிதம் உயர்வு ஆகியவை இதற்கான காரணங்களாக அமைகின்றன. மேலும், கடன் சுமை இல்லாமல் இருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டை விட குறைந்திருப்பதாக தெரிய வந்துள்ளது. முன்கூட்டியே ஓய்வு பெறும் திட்டத்தை பலரும் தள்ளிப்போடுவதாகவும் தெரிய வந்துள்ளது.



# வங்கிகளுக்கு இடையே டிஜிட்டல் ரூபாய் பயன்பாடு சோதனை அடிப்படையில் தொடங்க ஆர்பிஐ முடிவு




மும்பை, செப்.11

வங்கிகளுக்கு இடையேயான பரிவர்த்தனையில் எண்ம ரூபாயின் (டிஜிட்டல் கரன்சி) பயன்பாட்டை சோதனை அடிப்படையில் தொடங்குவதற்கு ஆர்பிஐ திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது:

கிரிப்டோ கரன்சிகள் மீதான மோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் டிஜிட்டல் ரூபாய் அறிமுகப்படுத்தப்படும் என 2022-23ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, மொத்தவிலை சந்தையில் டிஜிட்டல் ரூபாயானது சோதனை அடிப்படையில் கடந்த ஆண்டு நவம்பர் 1ம் தேதி அறிமுகப்படுத்தப் பட்டது. மத்திய அரசு வெளியிடும் நிதிப் பத்திரங்களைக் கொள்முதல் செய்வதற்கு மட்டுமே எண்ம ரூபாய் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதையடுத்து, சில்லறை விலை சந்தையில் டிஜிட்டல் ரூபாயானது கடந்த ஆண்டு டிசம்பர் 1ம் தேதி சோதனை முறையில் பயன் பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், எண்ம ரூபாயின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்கு ஆர்பிஐ முடிவெடுத்துள்ளது. அதன்படி, வங்கிகளுக்கு இடையேயான பரிவர்த்தனையில் டிஜிட்டல் ரூபாயின் சோதனை அடிப்படையிலான பயன்பாடு இந்த மாதத்திலோ அல்லது அடுத்த மாதத்திலோ தொடங்கப்படும் என ஆர்பிஐ நிர்வாக இயக்குநர் அஜய் குமார் சௌதரி தெரிவித்துள்ளார். எஸ்பிஐ, பரோடா வங்கி, யூனியன் வங்கி, ஹெச்டிஎஃப்சி, ஐசிஐசிஐ, கோடக் மஹிந்திரா, யெஸ், ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட், ஹெச்எஸ்பிசி ஆகிய 9 வங்கிகளுக்கு மட்டுமே எண்ம ரூபாயின் சோதனை பயன்பாட்டில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டாடா நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் இந்திய சந்தையில் முன்பதிவு துவக்கம்

மும்பை, செப்.11

டாடா நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் மாடல் விவரங்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. தற்போது இந்த காருக்கான முன்பதிவுகளை டாடா மோட்டார்ஸ் நிறுவனம் துவங்கியுள்ளது. அந்த வகையில் டாடா நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் மாடலுக்கான முன்பதிவு கட்டணம் ரூ.21 ஆயிரம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.




முன்பதிவு அதிகாரப்பூர்வ ஷோரூம் மற்றும் ஆன்லைன் வலைத்தளங்களில் நடைபெறுகிறது. மேலும், இந்திய சந்தையில் புதிய டாடா நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் மாடல் கிரியேடிவ் பிளஸ், ஃபியர்லெஸ், ஃபியர்லெஸ் பிளஸ், ஃபியர்லெஸ் பிளஸ் எஸ், எம்பவர்டு மற்றும் எம்பவர்டு பிளஸ் என ஆறு வேரியண்ட்களில் கிடைக்கிறது.

மேலும், இந்த கார் மொத்தத்தில் ஏழுவித வண்ணங்களில் கிடைக்கிறது. இதன் அம்சங்களை பொருத்தவரை நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் மாடலில் 12.3 இன்ச் அளவு கொண்ட டச்-ஸ்கிரீன் இன்ஃபோடெயின்மெண்ட் சிஸ்டம், வயர்லெஸ் மொபைல் கனெக்டிவிட்டி, டிஜிட்டல் இன்ஸ்ட்ரூமெண்ட் கிளஸ்டர், பேடில் ஷிஃப்டர்கள், 2-ஸ்போக் ஸ்டீரிங் வீல், எலெக்ட்ரிக் சன்ரூஃப் வழங்கப்பட்டு இருக்கிறது.

இத்துடன் கூல்டு குளோவ் பாக்ஸ், 360 டிகிரி கேமரா, ஜெ.பி.எல். பிராண்டின் 9-ஸ்பீக்கர்கள் கொண்ட மியூசிக் சிஸ்டம், வயர்லெஸ் சார்ஜர் வழங்கப்படுகிறது. மேலும், மீடியம் ரேன்ஜ் மற்றும் லாங் ரேன்ஜ் என இரண்டு வித பேட்டரி பேக் ஆப்சன்களில் கிடைக்கிறது. இவைகளில் முறையே 30 கிலோவாட் ஹவர் மற்றும் 40.5 கிலோவாட் ஹவர் என இருவித பேட்டரி பேக் வழங்கப்படுகிறது. இவை முறையே 325 கிலோமீட்டர்கள் மற்றும் 465 கிலோமீட்டர்கள் வரையிலான ரேன்ஜ் வழங்குகிறது. புதிய டாடா நெக்சான் இவி ஃபேஸ்லிஃப்ட் மாடல் மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தை 8.9 நொடிகளில் எட்டிவிடும். மேலும் மணிக்கு அதிகபட்சம் 150 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டிருக்கிறது.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.06 கோடி பேருக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும்

## முதல்வர் ஸ்டாலின் தகவல்

சென்னை, செப்.11

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று தொடங்கப்படவுள்ளதையொட்டி அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஆற்றிய உரையில்:

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தொடக்க விழாவானது வருகிற 15–ஆம் நாள் காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கிறது. அன்றைய தினமே அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது. தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் ஆயிரம் ரூபாயை மாதாமாதம் ஆண்டு தோறும் பெறப் போகிறார்கள். அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தேவைப்படும் திட்டமாகவும் அதிகப்படியான பயனாளிகள் உள்ளடக்கிய திட்டமாகவும் இது அமைந்துள்ளது.

இதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளாகிய உங்களுக்கு இருக்கிறது. ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதால் கிடைக்கின்ற பாராட்டு, ஒரு கோடி பாராட்டுகளுக்கு சமம். அதேபோல்தான் சிறு தவறு நடந்துவிட்டால் அதனால் கிடைக்கும் கெட்டபெயரும், என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. எனவே எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் எந்த ஒரு தனிநபருக்கும் சிறு தவறு கூட நடந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருவதை, தற்போதும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப்டம்பர் 15 முதல் கிடைக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இத்தகைய தகுதி பெற்ற குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதம் தோறும் வங்கிகளில் அவர்களது கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும். ஏ.டி.எம். கார்டுகள் முதற்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், படிப்படியாக விரைவில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஏ.டி.எம். கார்டு வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும்.

பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது, அதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல், வரும் 15-ஆம் தேதி, என்னுடைய சார்பில் மகளிருக்கு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்தியில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய வீலியியி-ய்ஷௌள எண்ணும் சேர்க்கப்பட வேண்டும். இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர். அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை எங்களால் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியாக வேண்டும்.

அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவார்கள். சிலருக்கு சந்தேகங்கள் இருக்கலாம் மறுபடியும் நம்மிடம் விண்ணப்பிப்பார்கள்.



அவர்களுக்கும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். வாய்ப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு அரசின் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படும்.வருகிற 15-ஆம் நாள் அன்று மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான விழா நடக்க இருக்கிறது. பணம் கிடைத்தவர்கள் மகிழ்ச்சியாக வருவார்கள். பணம் கிடைக்காத மகளிர் யாராவது அந்த இடத்துக்கு வந்து கேட்டால், பதில் சொல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

தனியாக இதற்கென அலுவலர்களை உட்கார வைத்து, இப்படி கேட்க வரும் மகளிரிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி, 'நாங்கள் பரிசீலிக்கிறோம்' என்பதைச் சொல்லி அனுப்பி வைக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும். இதைச் செய்யாவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், அது மாநிலம் முழுவதும் பெரிய செய்தியாக மாறிவிடும். அதனால் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும்.

மாதத்தில் முதல் ஒருவார காலம் இந்த திட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் மாபெரும் திட்டம் இது. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் மாதம் தோறும் பயனடையும் திட்டம் இது. எனவே, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நாம் மக்களிடம் எடுத்துச்சொல்லி வர வேண்டும்.

* மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்
* முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்
* புதுமைப் பெண் திட்டம் மூலம் மாணவியருக்கு 1000 ரூபாய்
* இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டம்
* மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் கலைஞர் உரிமைத் திட்டம் ஆகிய 5 திட்டங்களைப் பற்றியும் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை முறையாகச் செயல் படுத்தினாலே, அதனால் பயனடைந்தவர்கள் மிகப்பெரிய அளவுக்கு நம்மைப் பாராட்டி பேசுவார்கள். அத்தகைய பாராட்டுகளை மட்டுமே பெற்றுத்தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# ஃபாஸ்ட் சார்ஜிங் வசதியுடன் அறிமுகமானது புதிய ஃபயர் பாட்ஸ் ஆரா இயர்பட்ஸ்

புது தில்லி, செப்.11

ஃபயர்-போல்ட் நிறுவனம் ஃபயர் பாட்ஸ் ஆரா இயர்பட்ஸ் மாடலை இந்திய சந்தையில் அறிமுகம் செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. முன்னதாக ஜனவரி மாத வாக்கில் அறிமுகமான ஃபயர் பாட்ஸ் நின்ஜா 601 மாடல் வரிசையில், இந்த இயர்பட்ஸ் அறிமுகமாகி இருக்கிறது.

இன்-இயர் ரக டிசைன் கொண்டிருக்கும் புதிய இயர்பட்ஸ் 10 மில்லிமீட்டர் டைனமிக் டிரைவர்கள், 3டி சரவுண்ட் சவுண்ட் பேஸ் எஃபெக்ட்களை கொண்டிருக்கிறது. மேலும், இந்த இயர்பட்ஸ்-இல் குவாட் மைக் ஏ.ஐ. இ.என்.சி. வசதி உள்ளது. இது அழைப்புகளின் போது வெளிப்புற சத்தத்தை தடுத்து நிறுத்தி, தெளிவான தகவல் பரிமாற்றத்திற்கு வழி வகுக்கிறது. புதிய ஃபயர் பாட்ஸ் ஆரா மாடலில் உள்ள பேட்டரி முழு சார்ஜ் செய்தால் 40 மணி நேரத்திற்கு பேட்டரி பேக்கப் வழங்குகிறது.

இத்துடன் இதில் உள்ள ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி காரணமாக இதனை பத்து நிமிடங்கள் சார்ஜ் செய்தால் 100 நிமிடங்களுக்கு பிளேபேக் பெற முடியும். இதில் யு.எஸ்.பி. டைப் சி போர்ட் வழங்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் 40எம்எஸ் வரையிலான லோ-லேடன்சி கேமிங் மோட், ப்ளூடூத் 5.3, ஐபிஎக்ஸ்4 தர ஸ்பிலாஷ் ரெசிஸ்டண்ட் வசதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஃபயர்-போல்ட் ஃபயர் பாட்ஸ் ஆரா இயர்பட்ஸ் புளூ, கிரீன், பிளாக், கிரே, பின்க், வைட் மற்றும் ஸ்கை புளூ வண்ணங்களில் கிடைக்கிறது. இதன் விலை ரூ. 999 என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.



# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது




விருதுநகர், செப்.11

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள்; கூட்டம் மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனை பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள் ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப் பட்டது. மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்க ளுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சியர் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இம்மனுக்களை மாவட்ட ஆட்சியர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். முன்னதாக, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் மூலம் 5 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்களையும், 12 பயனாளிகளுக்கு ரூ.3 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.